# விளையாட்டு அறிவியலில் புதிய படிப்புகள் துவக்கம்

சென்னை, ஆக. 5–

ராமச்சந்திரா உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில், விளையாட்டு அறிவியல் துறையில், புதிய படிப்புகள் துவங்கப்பட்டு உள்ளன.

சென்னை, போரூரில் உள்ள, ராமச்சந்திரா உயர் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், பஞ்சாப் மாநிலம், பாட்டியாலாவில் உள்ள, நேதாஜி சுபாஷ் தேசிய விளையாட்டு கழகத்துடன் இணைந்து, விளையாட்டு அறிவியல் துறையில், புதிய படிப்புகளை துவக்கி உள்ளது.

முதற்கட்டமாக, ஸ்போர்ட்ஸ் பிசியோதெரபி, ஸ்போர்ட்ஸ் நியுட்ரிஷன் படிப்புகளுக்கு, மாணவர் சேர்க்கை இன்று துவங்குகிறது.

ஸ்போர்ட்ஸ் பிசியோதெரபி படிப்புக்கு, பிசியோதெரபியில் இளங்கலை, முதுகலை பட்டம் பெற்றவர்கள், விளையாட்டு கழகங்கள், விளையாட்டு குழுக்கள், கிளப்புகளில், மூன்றாண்டு பணி அனுபவம் பெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம்.

ஸ்போர்ட்ஸ் நியுட்ரிஷன் படிப்புக்கு, 'புட்ஸ் அண்ட் நியுட்ரிஷன், அப்ளைட் நியுட்ரிஷன், பப்ளிக் ஹெல்த் நியுட்ரிஷன், கிளினிக்கல் நியுட்ரிஷன் மற்றும் டையடிக்ஸ், புட் சயின்ஸ் மற்றும் குவாலிட்டி கன்ட்ரோல் அல்லது ஸ்போர்ட்ஸ் நியுட்ரிஷன்' துறைகளில், பட்ட மேற்படிப்பு பெற்றிருக்க வேண்டும்.

இத்துறைகளில், இளங்கலை பட்டம் பெற்று, அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டு கழகங்கள், கிளப்புகள், தேசிய – மாநில அளவிலான, விளையாட்டு குழுக்களோடு இணைந்து, மூன்றாண்டு பணி அனுபவம் பெற்றவர்களும், நுழைவுத் தேர்வு எழுதலாம்.

விண்ணப்பங்களை, இன்று முதல் ஆக., 10 வரை, https://nsnis.org/, https://www.sriramachandra.edu.in/ என்ற இணையதளத்தில் பதிவிறக்கம் செய்யலாம்; ஆக., 24ல் வகுப்புகள் துவங்குகின்றன.

விளையாட்டு அறிவியல் மைய இயக்குனர், எஸ்.ஆறுமுகம் கூறியதாவது:

புதிய படிப்புகள், உலகத் தரம் வாய்ந்ததாக இருக்க, ஆஸ்திரேலியா, பிரிட்டன், மலேஷியா நாடுகளின், வல்லுனர்கள் பயிற்சி அளிக்க உள்ளனர். இதனால், விளையாட்டு வீரர்களுக்கு, காயங்கள் ஏற்படுவதை குறைக்கலாம்.

இவ்வாறு, அவர் கூறினார்.